பொருளாதாரத்தில் நலிந்த பட்டியலின –

# பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் 10 சதவிகித சலுகையில் இடம் உண்டா?

## மக்களவையில் – கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, ஆக.14-

2019 முதல் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு ஒன்றிய அரசு 10 சதவீத இட ஒதுக்கீடு சலுகை வழங்கி வருகிறது. ஆனால், இந்த சலுகை பட்டியல் இன மற்றும் பழங்குடி சமுதாய மக்களுக்கு வழங்கப் படுவதில்லை. அதைப் போலவே, இந்த சலுகை இதரபிற்பட்ட சமுதாய மக்களும் இந்த 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் சேர்க்க படவில்லை. இவர்களுக்கு சாதி அடிப்படையில் சமுதாய ரீதியாகவும் கல்வியிலும் பின்தங்கியவர்கள் என்ற காரணத்தால் மட்டுமே இட ஒதுக்கீடு சலுகை வழங்க அரசியல் சட்டம் வழிசெய்கிறது. ஆனால், பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டை 2019 முதல் ஒன்றிய அரசு அளித்து வருகிறது. இதற்கான அரசியல் சட்ட திருத்தத்தையும் ஒன்றிய பாஜக அரசு செய்தது. இந்நிலையில், இந்த பொருளாதார ரீதியான அடிப்படையில் வழங்கப் படும் 10 சதவீத சலுகையில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய, பட்டியல் சாதியினர், பழங்குடியினர், இதரபிற்படுத்தப் பட்ட சாதியினர் உள்ளிட்ட அனைத்து சமுதாய பிரிவினவருக்கும் வழங்க பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த கோரிக்கை தொடர்பான கேள்வி ஒன்றை நாடாளுமன்றத்தில் மக்களவை திமுக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார். இந்த கேள்விக்கு ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சர் பி.எல். வர்மா நேற்று முன்தினம் (12.8.2025) மக்களவையில் பதிலளித்தார்.

**10 சதவீத சலுகைத் தேர்வர் தகுதி பட்டியல் சாதியினர் தகுதியை விடவும் குறைவானதா?**

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்படும் சலுகையில் பட்டியல் சாதி, பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பிரிவினரும் சேர்க்கப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை அரசு அறிந்துள்ளதா? அப்படியானால் அதன் மீதான அரசின் முடிவின் விவரம் என்ன? அரசு இது தொடர்பான கோரிக்கையை ஏற்கவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? மேலும், பொருளாதார அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ள 10 சதவீத இட ஒதுக்கீட்டு சலுகையின் கீழ் தேர்ந்தெடுக்கப் படுபவர்களின் தேர்வு மதிப்பெண் பட்டியல் சாதி மற்றும் இதர பிற்படுத்தப் பட்ட தேர்வர்களைவிடவும் கணிசமாகக் குறைவானதாக பல அரசு நியமனங்களில் உள்ளதா?அப்படியென்றால் இந்த நிலையை சரி செய்ய ஒன்றிய அரசினால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்? என்று பல்வேறு விஷயங்கள் குறித்து தனது கேள்வியில் டீ.ஆர்.பாலு எம்.பி. எழுப்பி இருந்தார்.

**அரசிடம் தரவுகள் இல்லை!**

“2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் 103 வது திருத்தத்தின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவை சேர்ந்த வர்களுக்கு அரசுசார் நியமனங்களிலும் கல்வி நிலையங்களிலும் 10 சதவீதம் அளவு வரை இட ஒதுக்கீடு வழங்கப் படுகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு உறுதிபூண்டுள்ளது. பொருதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் (இ.டபுள்யூ.எஸ்) நியமனங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் துறைவசம் இல்லை”

இவ்வாறு அமைச்சர் வர்மா தெரிவித்துள்ளார்.

## வாட்ஸ்அப்பில் வலம் வருவது!







சென்னை, எழிலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நேற்று (13.08.2025) அரசு விதிகளுக்கு ஏற்ப தரமான நெல் அரைப்பை உறுதி செய்தல், அரிசி ஈரப்பதம், நிறம், சுத்தம் போன்ற தரச் சான்றுகளை பின் பற்றுதல், பொது விநியோகம் மற்றும் பிற அரசுத் திட்டங்களுக்கு அரிசியை நேரத்திற்குள் வழங்கும் திட்டமிடல் ஆகியவை குறித்து துறை அலுவலர்கள் மற்றும் நெல் அரவை முகவர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலர் சத்ய பிரத சாகு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு சிவராசு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகளை நவீனப்படுத்த

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.14-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 11 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில், கடந்த பத்தாண்டுகளில் வங்கி துறையில் செயல்படாத சொத்துகளின் மதிப்பு எவ்வளவு என்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உரிய கடன் வழங்கப்படுகிறதா? என்றும், டிஜிட்டல் வங்கி பரிவர்த்தனைகள் மேம்படுத்த உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்றும் கிராமப்புறங்களில் வங்கி கணக்கு வசதிகள் எவ்வளவு தூரம் சென்றடைந்துள்ளன? என்றும், ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்திரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த பத்தாண்டுகளில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி, பேங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி மற்றும் யூனியன்பேங்க் ஆப் இந்தியா உள்பட12 வங்கிகளின் வாராக் கடன்களின் மதிப்பு, கடந்த 2015 முதல் 2025 வரை ரூபாய் 8,11,000 கோடிக்கும் அதிகமாக உள்ளது என்றும், வங்கித் துறையின் பணிகளை ஒழுங்கு படுத்தும் வகையில், முறையாக கடன் வழங்குதல், தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்துதல், புதிய திவால் சட்டம், பெரிய கடன்களுக்கான தகவல் களஞ்சியம் சுமத்தப் பட்ட சொத்துக்களை மீட்பதில் கவனம், தேசிய அனைத்து மறுசீரமைப்பு நிறுவனம் ஆகிய பல்வேறு முயற்சிகளை ரிசர்வ் வங்கி எடுத்து வருகிறது என்றும், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளின் அதிகாரிகளை உரிய முறையில் தேர்வு செய்தல், யுபிஐ மற்றும் நேரடி பலன் பரிமாற்ற முறையில் வங்கியின் நடவடிக்கைகளை கண்காணித்தல், வங்கி கட்ட விதிகள் 2025 அமல்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு தேவையான கனரக மெஷின்களை கொள்முதல் செய்ய, கடன் உறுதியளிப்பு திட்டத்தை ஒன்றிய அரசு வங்கித் துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது என்றும், இது வரை கடந்த நான்கு ஆண்டுகளில் ரூபாய் ஏழு இலட்சம் கோடிகள் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும், அவசர கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ஒரு கோடிக்கும் அதிகமான சிறு, குறு நிறுவனங்களுக்கு இதுவரை ரூபாய் இரண்டரை இலட்சம் கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் கடன் உறுதியளிப்பு நிதியம் என்ற நிறுவனத்தின் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கென ரூபாய் 10 இலட்சம் கோடிகள் அளவிற்கு கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும், டிஜிட்டல் பணம் பரிவர்த்தனைகள் மூலம், ரூபாய் 244 இலட்சம் கோடிகள்அளவிற்கு வங்கித்துறையில் வணிகம் நடந்து வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரதம மந்திரியின் ஜன்தன் திட்டத்தின் கீழ் 56 கோடி ஜன்தன் வங்கி கணக்குகளில் ரூபாய் 2,61,882 கோடிகள் அளவிற்கு, வங்கியில் நிதி யுள்ளது என்றும், காப்பீட்டு திட்டங்களின் வழியாக 76 கோடி மக்களுக்கு பயன் கிடைத்துள்ளது என்றும், அடல் ஒய்வூதிய திட்டத்தின் மூலம் எட்டு கோடி மக்களுக்கு பயன் கிடைத்துள்ளது என்றும், பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின் கீழ் ரூபாய் 35 இலட்சம் கோடிகள் அளவிற்கு கிராமப்புற மக்களுக்கும் பெண்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய இணையமைச்சர் பங்கஜ் சௌத்திரி பதில் அளித்துள்ளார்.

